<u>சுருக்கம்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – தேசிய கிராம சுய ஆட்சித் திட்டம் (RGSY) – பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டின் (Training and Capacity Building) கீழ் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட இரண்டாம் தவணையாக மாநில அரசின் பங்குத் தொகை ரூ.78,66,666/- அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா-3) துறை

அரசாணை (நிலை) எண்.29 நாள்: **30.03.2010**

படிக்கப்பட்டவை:

1. இந்திய அரசின் பஞ்சாயத்துராஜ் அமைச்சக கடித எண். T-11011/10/2008/பயிற்சி, நாள் 31.3.2008.
2. அரசாணை (நிலை) எண். 29, <u>ஊ</u>.வ.(ம).<u>ஊ</u>.(பரா-3) துறை, நாள் 31.03.2009.
3. இந்திய அரசின் பஞ்சாயத்துராஜ் அமைச்சக, கடித எண். T-11011/10/2008/பயிற்சி, நாள் 17.11.2009.
4. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர், கடித எண்.95078/2008, பயிற்சி 1, நாள் 24.11.2009.

*******

<u>ஆணை:</u>

தேசிய கிராம சுய ஆட்சித் திட்டத்தின் (Rashtriya Gram Swaraj Yojana) மூலம் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டின் (Training and Capacity Building) கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் மூன்றடுக்கு ஊராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்திட ஆய்வுகளை மேற்கொள்ளவும், கட்டமைப்பு வசதி மற்றும் தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்தவும் மத்திய அரசு மொத்தம் ரூ.6,29,44,200/- வழங்கி உள்ளது.

2) மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட மொத்த தொகையில் 75 சதவீதமான ரூ.4,72,08,150/-இல் முதல் தவணையாக (50%) ரூ.2,36,04,075/-ஐ மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கியதன் அடிப்படையில் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மாநில அரசின் 25 சதவீத பங்களிப்பு ரூ.1,57,36,050/-இல் 50 சதவீதமான ரூ.78,68,025 முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

3) மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மத்திய அரசு தற்போது இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது தவணையாக ரூ.2,36,00,000/-ஐ மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்கான ரூ.78,66,666/-னை (ரூபாய் எழுபத்தெட்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு மட்டும்) வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) மாநில அரசின் மொத்த 25 சதவீத பங்களிப்பு ரூ.1,57,36,050/-இல் இரண்டாவது தவணைத் தொகையாக ரூ.78,66,666/-ஐ (ரூபாய் எழுபத்தெட்டு இலட்சத்து அறுபத்தாராயிரத்து அறுநூற்று அறுபத்தாறு மட்டும்) விடுவிக்க முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2515 - 00 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 003 – பயிற்சி – I திட்டத்தில் சேராதது AA - மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 09 – உதவித் தொகை – 01 – நடப்புச் செலவுக்கான – உதவித் தொகை (த.தொ.கு 2515 00 003 AA 0919)"

6) இச்செலவினத்திற்குத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2009-2010 இறுதித் திருத்திய நிதியொதுக்கம் மற்றும் இறுதி துணை மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை உரியவாறு பெற்று மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கிட அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8) இந்த அரசாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 88/DS(KK)/RD/10 நாள் 30.03.2010 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை-15
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-18/35.

<u>நகல்</u>
நிதித் (ஊ.வ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.